29th August 1970]

THE HON. THIRU V. R. NEDUNCHEZHIYAN : (*a*) No.

(*b*) Does not arise.

*46. *Q.*—THIRU SAW GANESAN (on behalf of THIRU G. SWAMINATHAN) : Will the Hon. the Minister for Education and Health be pleased to state :

(*a*) whether it is a fact that the payment of salary to teachers of Tiruchendur Panchayat Union was delayed every year ; and

(*b*) if so, the reasons therefor ?

திரு. சா. கணேசன் (திரு. ஜி. சாமிநாதன் சார்பில்) : மாண்புமிகு கல்வி—சுகாதார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) திருச்செந்தூர் ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்களுக்குரிய சம்பளம் ஒவ்வோர் ஆண்டும் தாமதமாகக் கொடுக்கப்பட்டது உண்மையா?

(இ) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை ?

THIRU K. S. ABDUL WAHAB : On a point of order, Sir. The question stands in the name of the hon. Member Thiru G. Swaminathan. The hon. Member is not present. Nobody is here to represent him.

MR. CHAIRMAN : Thiru Saw Ganesan put the question on behalf of the hon. Member Thiru G. Swaminathan.

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) திருச்செந்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் நிதி நிலை சரியாக இல்லாத காரணத்தால் இடையில் சில காலத் தாழ்வு ஏற்பட்டது.

திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை : திருச்செந்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் அடிக்கடி இப்படிக் காலதாமதம் ஏற்படுவதற்குக் காரணம் அந்த ஊராட்சி ஒன்றிய நிதியில் ஆசிரியர்களுக்குச் சம்பளம் கொடுப்பதற்கு என்று ஒதுக்காமல், அந்தப் பணத்தை வேறு பணிகளுக்குச் செலவிடுவதுதான் என்பது உண்மையா ? ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியமும் பள்ளி ஆசிரியர்களுக்கு எவ்வளவு சம்பளம் கொடுக்க வேண்டுமோ, அதை முதலில் ஒதுக்கிவிட்டு, இதர பணிகளுக்கு ஏனைய நிதியை ஒதுக்குமாறு பொதுவான உத்தரவை அரசு பிறப்பிக்குமா ?

மாண்புமிகு திரு. வி.ஆர். நெடுஞ்செழியன் : ஊராட்சி ஒன்றியம் கல்விக்கு என்று ஒதுக்குவதை அதற்கே செலவிட வேண்டுமே தவிர, வேறு துறைக்குச் செலவிடக் கூடாது என்பதை உள்ளாட்சித் துறை மூலமாக ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் சொல்லப்பட்டிருக்கிறது. நிதிப் பற்றாக்குறை இந்த ஒன்றியத்தைப் பொறுத்த வரை பல காலமாக இருந்துவருகிறது. இதுபோன்ற நிலை ஏற்படாமலிருக்க வழி வகை கண்டு அதற்கான அறிக்கையைச் சமர்ப்பிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது. அங்கே இந்தச் சம்பளம் ஓரிரு மாதங்கள் தள்ளியே கொடுத்துக்கொண்டு வந்திருக்கிறார்கள். 1-8-70-ல் ஏழாவது மாதம் வரையில் உள்ள சம்பளம் கொடுக்கப்பட்டுவிட்டது.

[29th August 1970

திரு. சா. கணேசன் : ஊராட்சி ஒன்றியத்தின் நிதி நிலை சங்கடமாக இருக்கிறது என்று சொல்லப்படுவதனால், அப்பாவிகளான ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களுடைய நிதி நிலை எங்ஙனம் ஒரு மாதம், இரண்டு மாதம் அல்லது மூன்று மாதங்கள் செம்மையாக இருக்க முடியும்? ஆகையால் எந்தக் காரணத்தை முன்னிட்டும், ஆசிரியர்களுக்குச் சம்பளம் கொடுத்த பிறகுதான், பிறவற்றிற்குச் செலவிடுவதை மேற்கொள்ள வேண்டுமென்று அரசு திட்டவட்டமாக ஆணை பிறப்பிக்க முன்வருமா என்பதையும், அத்தோடு கூட பல்வேறு துறையில் இதைக் கொடுக்க முடியாத நிலையில் செலவு செய்வதென்றால், அது விரயம் என்ற பிரிவில் அடங்கும், அந்த மாதிரி விரயம் செய்யும் நிலையில் கல்வியும் அதற்கு இன்றியமையாத ஆசிரியர்களுக்குச் சம்பளம் கொடுப்பதும் தடைபடுவது எந்தக் காரணத்தை முன்னிட்டும் தொடரக் கூடாது என்ற ஆணை பிறப்பிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : இப்படிப்பட்ட நிதிப் பற்றுக்குறை இருந்து செலவழிக்க முடியாமல் இருக்கிற ஊராட்சி ஒன்றியங்களுக்கு முன்கூட்டியே பணத்தை அனுப்புகிற முறையை, இந்த ஊராட்சி ஒன்றியத்தைப் பொறுத்த வரையில், அரசினர் மேற்கொண்டிருக்கிறார்கள். கல்விக்கு ஒதுக்கப்பட்ட பணத்தை ஆசிரியர்களுக்குத்தான் தரவேண்டுமே தவிர, வேறு எதற்கும் செலவழிக்கக் கூடாது என்று வரைமுறை ஏற்படுத்த வேண்டுமென்று ஊராட்சித் துறைக்குக் கூறப்பட்டிருக்கிறது. அவர்கள் அதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாகக் கூறியிருக்கிறார்கள்.

திரு. கே. ராஜாராம் : பஞ்சாயத்து ஒன்றியத்தில் ஆசிரியர்களுக்குச் சம்பளம் கொடுக்க முடியாத நிலை ஏற்படுவது என்பது நம்ப முடியாத விஷயம். ஏனெனில் சட்டப்படி கல்வி வரியின் மூலம் வரக்கூடிய வருமானத்தைத் தனியாக ஒதுக்கி வைத்துவிடுகிறார்கள். அதற்கு ஈட்டுத் தொகையாக அரசாங்கத்திலிருந்தும் கொடுக்கிறார்கள். இத்துடன் பஞ்சாயத்து யூனியன் பொது நிதியிலிருந்தும் இத்தனை சத விகிதம் முதலிலேயே கல்வி நிதியில் சேர்க்க வேண்டுமென்று விதிகள் கூறுகின்றன. இத்தனையையும் மேற்பார்த்து நடத்தக்கூடிய கமிஷனர் இதைச் செவ்வனே நடத்தியிருந்தால், ஆசிரியர்களுக்குச் சம்பளம் கொடுக்காத நிலைமை ஏற்பட்டிருக்க முடியாது. நிர்வாகத்தில் இருக்கிற கமிஷனர் கல்வி நிதியிலிருந்து வேறு செலவுக்குப் பணத்தை எடுத்திருக்க வேண்டும். ஆகையால் அவற்றைக் கவனித்து இனிமேல் எந்த யூனியனிலும் கல்வி நிதியை வேறு எதற்காகவும் தொடக்கூடாது, அதைச் சரியாக உபயோகிக்க வேண்டுமென்று ஆணை பிறப்பிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : கல்வித் துறையிலிருந்து செலுத்தப்பட்ட பணத்தை அதற்கே செலவிடாததால்தான் இதைப் போன்ற இடர்ப்பாடுகள் ஏற்படுகின்றன. அப்படிச் செய்யக் கூடாது என்று உள்ளாட்சித் துறை மூலமாக ஒன்றியங்களுக்கு உத்தர விடப்பட்டிருக்கிறது.

29th August 1970]

புலவர் ஓ. அறிவுடை நம்பி : வாலாஜாபேட்டை நகராட்சி ஒன்றியத்தில் ஒவ்வொரு ஆண்டும் மூன்று மாதங்கள் காலம் கடந்துதான் சம்பளம் ஆசிரியர்களுக்குத் தரப்படுகிறது. அந்தப் பள்ளிகளை அரசு எடுத்துக்கொள்ள ஏதேனும் திட்டம் இருக்கிறதா ? காலம் தாழ்த்தாமல் சம்பளம் கொடுக்க இனி ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : மூலக் கேள்விக்கும் இதற்கும் தொடர்பில்லை என்றுல்கூட, ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். நகராட்சி மன்றத்தில் இருக்கிற உயர்நிலைப் பள்ளிகளை நகராட்சி மன்றங்களில் உள்ள நிதிப் பற்றுக்குறையினுல் நடத்த முடியாமல் தவித்துக்கொண்டிருக்கிறுர்கள். அதில் இந்த நகராட்சியும் ஒன்று. அவர்கள் கட்டவேண்டிய பணத்தையே கட்ட முடியாமல் தவித்துக்கொண்டிருக்கிறுர்கள். ஆகவே அரசினரே எடுத்துக்கொள்ள வேண்டுமென்ற விண்ணப்பத்தையும் நகராட்சி மன்றத்தார் தெரிவித்துக் கொண்டிருக்கிறுர்கள். அரசினரால் இப்போது 75 சதவிகிதம் கொடுக்கப்படுகிற மானியத் தொகையை உயர்த்தலாமா, இப்படிப்பட்ட நகராட்சிகளின் உயர்நிலைப் பள்ளிகளை அரசாங்கமே எடுத்துக் கொள்ளலாமா என்று யோசிக்கப்பட்டு வருகிறது.

Government Technical Examinations

*47. *Q.*—THIRU SAW GANESAN (on behalf of THIRU G. SWAMINATHAN) : Will the Hon. the Minister for Education and Health be pleased to state :

(*a*) whether it is a fact that qualified instructors working in institutes of commerce recognised by Government were all along being appointed as Assistant Examiners in commercial subjects in respect of Government Technical Examinations ;

(*b*) whether such a procedure is still in force ; and

(*c*) if not, the reasons therefor ?

அரசுத் தொழில் நுட்பத் தேர்வுகள்

திரு. சா. கணேசன் (திரு. ஜி. சுவாமிநாதன் சார்பில்) : மாண்புமிகு கல்வி—சுகாதார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) அரசினுல் ஏற்பளிக்கப்பட்ட வணிகவியல் கல்வி நிறுவனங்களில் பணியாற்றும் தகுதி வாய்ந்த ஆசிரியர்கள், அரசுத் தொழில் நுட்பத் தேர்வுகளில் வணிகப் பாடங்கள் குறித்து உதவித் தேர்வாளர்களாக நியமிக்கப்படுகின்றனரா ?

(இ) அத்தகைய நடைமுறை இன்றும் செயலில் உள்ளதா ?

(உ) இல்லை எனில், அதற்கான காரணங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) ஆம்.

(உ) கேள்விக்கு இடமில்லை.